**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 9/2019 |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | P. பொன்கமலக்கண்ணன் | CASTE | : | |
| S/O | பெருமாள் (லேட்) | RELIGION | : | இந்து |
| VILLAGE | வாடிப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 53 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.10.2025**

**குறுக்கு விசாரணை**

1. எனது நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தை எனக்காக மட்டும்தான் தாக்கல் செய்தேன். நான் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். 2ம் வாதி 3 வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். 2ம் வாதி இறந்துவிட்டதால் அவர்சார்பாக எனக்கு பரிகாரம் கேட்க உரிமையில்லை என்றால் 2ம் வாதியின் வாரிசு என்ற முறையில் பரிகாரம் கேட்கிறேன்.

2. எனது அப்பா பெயர் பெருமாள், அவருடன் பிறந்தவர்கள் பொன்சுப்பையா மற்றும் திருமலைச்சாமி. மேற்படி திருமலைச்சாமி மனைவிதான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா சொத்து தவிர எங்களுக்கு பூர்வீகமாக வேறு சொத்துக்களும் உள்ளன என்றால் சரிதான். எனது தகப்பனாரும் அவருடைய 2 சகோதரர்களுக்கும் இடையே 1976 ல் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் எனக்குத்தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது அப்பாவிற்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். (மேற்படி ஆவணத்தில் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

3. பி.வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி எனது அப்பாவிற்கும் அவரது 2 சகோதரர்களுக்கும் A, B, C என்று 3 பாகங்களாக தனித்தனியாக சொத்துக்கள் பிரிக்கப்பட்டும் 3 பேருக்கும் பொதுவாக D பிரிவில் சில சொத்துக்களும் பிரிக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினைக்குப்பின் எனது அப்பாவின் சகோதரரான சுப்பையா மாண்புமிகு மதுரை சார்பு நீதிமன்றத்தில் அசல்

வழக்கு எண் 526/1996 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்புப்படி எனது பூர்வீக சொத்துக்கள் 3 பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல.

4. மேற்படி வழக்கில் எனது பூர்வீக சொத்துக்கள் ABC என்று 3 பங்குகளாக பிரிக்கப்பட்டன என்றாலும் நான் வழக்கிற்காக அதை மறுத்து சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி தீர்ப்பில் C பிரிவில் தாவா சொத்து பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 27.04.2011ல் பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப்பத்திரத்தின்படி பொதுவாக உள்ள D பிரிவு சொத்துக்களை எனது அப்பாவும் அவரது சகோதரர்களும் 1ம் பிரதிவாதியும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான், அந்த பாகப்பிரிவினையில் உள்ள சொத்துக்களுக்கும் வழக்குச்சொத்துக்களுக்கும் சம்பந்தமில்லை.

5. ஏற்கெனவே பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்தை பிரிக்கப்படாத சொத்து என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 15.07.2002 தேதியில் ஆவண எண் 1068/2002 ஆவணப்படி பி.வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி கிடைத்த பாகத்தை 1ம் பிரதிவாதி விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். 14.09.2009 தேதியில் ஆவண எண் 1548/2009 ஆவணப்படி 1ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி கிடைத்த பாகத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான்.

6. மேற்சொன்ன சொத்துக்களைப்போல் பி.வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி கிடைத்த வேறு சில சொத்துக்களையும் 1ம் பிரதிவாதி விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்குத்தெரியாது. 1ம் பிரதிவாதி விற்பனை செய்த மற்ற சொத்துக்களை பொறுத்து நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர்களது பாகச்சொத்து. வழக்குச்சொத்தும் 1ம் பிரதிவாதியின் பாகத்திற்கு கிடைத்த சொத்துதான் என்றாலும் அதை அவர் சட்டப்பூர்வமாக விற்பனை செய்துள்ளார் என்றாலும் சரியல்ல, அது பிரிக்கப்படாத சொத்து.

7. எனது குடும்ப பூர்வீக சொத்துக்கள் 3 முறை பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதன்படி கிடைத்த பாகத்தைதான் 1ம் பிரதிவாதி விற்பனை செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. வழக்குரையில் சொத்து விவரத்தில் வழக்குச்சொத்தின் விஸ்தீரணம் 8 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் 160 சதுரடியை விற்பனை செய்துள்ளார்கள். வழக்குச்சொத்தின்

விவரத்தில் மேற்படி 160 சதுரடியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் முழுச்சொத்தையும் குறிப்பிட்டுள்ளேன்.

8. நான் வழக்கிற்காக 160 சதுரடியை குறிப்பிட்டு சொல்லாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.